# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No. 273/2023**

Deposition of Witness : PW-1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஆண்டவர் | Father's Name | : | |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 25-03-2025

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திருமதி. S.வனிதா, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை– தொடங்கப்பட்ட நேரம் : 11.46 மு.ப.

நான் இம்மனுவின் மனுதாரர் ஆவேன். நான் இன்று நீதிமன்றத்தில் எனது எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவைகள் தான். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான்.

| | | | |
|---|---|---|---|
| 1 | - | விபத்து சம்பந்தமான முதல் தகவல் அறிக்கையின் இணையதள பதிவிறக்க நகல் | ம.சா.ஆ–1 |
| 2 | - | எனது மகளின் இறப்பு சான்றிதழ் நகல் | ம.சா.ஆ–2 |
| 3 | - | பிரேத பரிசோதனை அறிக்கை இணையதள பதிவிறக்க நகல் | ம.சா.ஆ–3 |
| 4 | - | விபத்து பதிவேடு இணையதள பதிவிறக்க நகல் | ம.சா.ஆ–4 |

| | | | |
|---|---|---|---|
| 5 | - | மாதிரி வரைபடம் இணையதள பதிவிறக்க நகல் | ம.சா.ஆ–5 |
| 6 | - | விபத்திற்குள்ளான இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை ணையதள பதிவிறக்க நகல் | ம.சா.ஆ–6 |
| 7 | - | ஹரிகிருஷ்ணனின் வாரிசு சான்றிதழ் இணையதள பதிவிறக்க நகல் | ம.சா.ஆ–7, |
| 8 | - | எனது மகனின் கல்லூரி மற்றும் மாற்று சான்று நகல் | ம.சா.ஆ–8 |
| 9 | - | எனது மகன் ஹரிகிருஷ்ணனின் ஆதார் அடையாள அட்டை நகல் | ம.சா.ஆ–9. |
| 10 | - | எனது ஆதார் அடையாள அட்டை நகல் | ம.சா.ஆ–10 |
| 11 | - | எனது வங்கி கணக்கு புத்தக நகல் | ம.சா.ஆ–11 |

மனுப்படி தீர்ப்பாகுமாறு பிரார்த்திக்கிறேன்.

(ம.சா.ஆ–10, 11 அசல் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு, ஒப்பீடு செய்யப்பட்டு, நகல் ஆவணம் குறியீடு செய்யப்பட்டது.)

1 ம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினர்

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். இந்த விபத்தில் இறந்தவர் எனது மகன் ஹரிகிருஷ்ணன், விபத்து நடந்தபோது எனது மகனுக்கு 20 வயது இருக்கும். விபத்து சமயத்தில் எனது மகன் கல்லூரியில் 2 ம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தார். விபத்து சம்மந்தமான புகாரை யார் கொடுத்தார்கள் என்றால் கல்லூரியில் இருந்து கொடுத்தார்கள். புகார் யார் கொடுத்தார்கள் என்று எனக்கு

தெரியாது. விபத்து சமயத்தில் எனது மகன் ஹரிகிருஷ்ணன் என்பவருக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. என்னுடைய மகனுக்கு பழகுநர் ஓட்டுநர் உரிமம் விபத்து சமயத்தில் இருந்தது அதனை நான் இந்த வழக்கில் ஆவணமாக இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தை நேரடியாக யாரும் பாரக்கவில்லை. புகார் கொடுத்த கல்லூரியில் இருந்தவர்களும் விபத்தை நேரடியாக பார்கவில்லை. தகவல் தெரிந்து தான் அங்கு சென்ற பிறகு புகார் கொடுத்தார்கள். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். விபத்து நடந்தது சம்மந்தமான விசயங்களை நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். அந்த விசயங்கள் எனக்கு ஆம்புலன்ஸ் டிரைவர் எனக்கு தகவல் கூறியதன் அடிப்படையிலேயே அந்த விபரங்களை நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். விபத்து நடந்த நேரம் இரவு 10.45 மணி இருக்கும். விபத்து சமயத்தில் என் மகன் ஓட்டிச்சென்ற வாகனம் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் என் மகனின் நண்பர் ஆதித்யா என்பவருக்கு பாத்தியப்பட்டது. விபத்து சமயத்தில் எனது மகன் ஓட்டிச்சென்ற இருச்கர வாகனத்தில் அவருடன் எத்தனை பேர் பயணம் செய்தார்கள் என்றால் 1 நபர் பயணம் செய்தார். பேர் ஞாபகம் இல்லை. அந்த இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்ற பையனும் இந்த விபத்தில் இறந்துவிட்டார். விபத்து நடந்த தேதி 03.06.2023. விபத்து சமயத்தி்ல் எனது மகன் எந்த வருமானமும் ஈட்டடவில்லை என்றால் சரிதான். என் மகன் கல்லூரியில் அரசு வழங்கும உதவி தொகையில் தான் படித்தார் என்று சொன்னால் சரிதான். எனது மகன் இருசக்கர வானத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் தான் ஓட்டிச்சென்று ரோட்டின்தடுப்பு சுவர் மீது மோதி தான் விபத்து நடந்தது என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு காரணம் எனது மகனின் கவனக்குறைவு தான் என்று சொன்னால் சரிதான். இந்த விபத்திற்கு காரணம் எனது மகனின் கவனக்குறைவு என்பதால் டாட் பீசர் விதிகளின் படி 2ம் எதிர்மனுதார் நிறுவனம் எனக்கு எந்தவிதமான இழப்பீட்டு தொகையும் தர கடமைப்படடவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது மகன் ஓட்டிச்

சென்ற வாகனம் அவருக்கு பாத்தியப்பட்டது இல்லை என்ற அடிப்படையில் உரிமையாளர் என்ற முறையிலோ அல்லது அந்த இருசக்கர வாகனத்தின் உரிமையாளரின் ஒப்புதலுடன் இந்த வாகனத்தை எடுத்துச் சென்று விபத்தை ஏற்படுத்தினார் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்தானது பாலிசி விதிமுறை மீறலில் நடந்துள்ளதால் இந்த 2ம் எதிர்மனுதாரரை பொருத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ்நான் கோரியுள்ள தொகை அதிகம் அது எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 12.15 பி.ப.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR GN
Digitally signed by SARAVANAKUMAR GN
DN: email=gnsaravanakumar@aij.gov.in, cn=SARAVANAKUMAR GN, c=IN
Date: 2025.03.25 19:42:01 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 25-03-2025